Swamy Vipulananda
Institute of Aesthetic Studies,
Eastern University, Sri Lanka.


# 2nd International Conference



# ICSVIAS

International Conference

## Challenges and Importance of Intangible Cultural Heritage in times of war and post war

Abstracts
2017

BATTICALOA, SRI LANKA

# புராதன சமூகங்களில் காணப்பட்ட தீட்டு பற்றிய பிரச்சினையின் விஸ்தரிக்கப்பட்ட வடிவமே இன்றைய சூழல் மாசடைதல் தொடர்பான பிரச்சினை - மேரி டக்ளஸின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு

**P.Poologanathan**

## 01. ஆய்வு அறிமுகம்

பண்பாட்டு மானிடவியலாளரான மேரி டக்ளஸ் கொங்கோ நாட்டில் புராதன மக்களின் வாழ்க்கை முறை தொடர்பில் ஆராய்ந்து தனது Purity and Danger(1966) எனும் நூலினை வெளியிட்டார். அம்மக்களின் ''நாளாந்த வாழ்க்கை'' முறை தொடர்பில் தம் ஆய்வினை மேற்கொண்ட டக்ளஸ் அருபப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பான மெய்யியல் விவாதங்களில் ஈடுபடாது பல தனிப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அம் மக்களின் வாழ்வியலோடு இணைந்த தீட்டு, புனிதம் தொடர்பில் தம் ஆய்வினை மேற்கொண்டார். தீட்டு, அசுத்தம் தொடர்பில் இவர் ஆராயும் பொழுது நடைமுறை ஒழுங்கிற்கு புறம்பான விடயங்களை ஒரு தீட்டாகவே நோக்குகின்றார். தீட்டு எனும் சொல் அசுத்தம் எனும் சொல்லுக்கு ஒப்பானதாக எப்பொழுதும் இவரால் நோக்கப்பட்டது. அசுத்தம் என்பது சுத்தப்படுத்தப்பட வேண்டியதொன்று. இப் புனிதப்படுத்தலுக்காக அக்கால சமூகம் பல்வேறு சடங்கு முறைகளை மேற்கொண்டு (பாலியிடல், நேர்த்தி, மரணச்சடங்கு) அச் சமூகத்தினை தீட்டிலிருந்து புனிதப்படுத்தினர். பழங்குடி மக்களின் சமூக வாழ்வின் புனிதப்படுத்தல் தொடர்பில் ஆய்வு செய்து தனது மேற்படி நூலை நிறைவு செய்த மேரிடக்ளஸ் தனது பிற்கால இலக்கியமான Risk and Culture எனும் நூலில் நவீனகால சமூகத்தின் பிரச்சினையான சூழல் மாசடைதல் தொடர்பாக ஆராய்ந்தார். இங்கு டக்ளஸ் சூழல் மாசடைதல் தொடர்பில் குறிப்பிடும் பொழுது அமெரிக்கா போன்ற விருத்தியடைந்த நாடுகளில் சமூக முன்னேற்றம் எனும் பெயரில் மேற்கொள்ளப்படும் சில தொழில்நுட்ப ரீதியான விடயங்கள் சூழலுக்கு தீங்கு பயப்பனவாகவே காணப்படுகின்றது என்றார். புராதன சமூகங்களில் அசுத்தத்தை நீக்கி சுத்தப்படுத்தலுக்காக தீய சக்திகளுக்கு எதிரான சடங்கினை மேற்கொள்ளுவது போன்று நவீன சமூகமும் தனது பாதுகாப்பிற்காக சுற்றுச்சூழல் தினம் , மரநடுகை தினம், பசுமைப்புரட்சி வாரம், புவி தினம் போன்ற சடங்குகளை ஏற்படுத்தி நவீன சமூகத்தை புதுப்பித்துக்கொள்ள முயற்சிக்கின்றது என்பதனை தனது Risk and Culture எனும் நூலில் குறிப்பிடுகின்றார். இவ்வாய்வானது மேரிடக்ளஸ ின் மேற்படி இருநூல்களையும் ஒப்பிட்டு பண்டைய சமூகத்தில் காணப்பட்ட தீட்டு, அசுத்தம் பற்றிய பிரச்சினையின் விஸ்தரிக்கப்பட்டதோர் வடிவமாக இன்றைய சூழல்மாசடைதல் தொடர்பான பிரச்சினை அமைந்து காணப்படுகின்றதா? என்பதனை ஆராய்வதாக அமைகின்றது.

## 02. ஆய்வுப் பிரச்சினை

புராதன சமூகத்தில் காணப்பட்ட தீட்டு பற்றிய பிரச்சினையின் விஸ்தரிக்கப்பட்ட ஒரு வடிவமாக இன்றைய சூழல் மாசடைதல் பற்றிய பிரச்சினை அமைகின்றதா? என்பதனை மேரி டக்ளஸின் Purity and Danger, Risk and Culture எனும் இருநூல்களையும் ஒப்பிட்டு ஆராய்வதே இவ்வாய்வின் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

## 03. கருதுகோள்

இவ்வாய்வுப் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு பின்வரும் கருதுகோள் முன்வைக் கப்படுகின்றன. புராதன சமூகத்தில் காணப்பட்ட தீட்டு, அசுத்தம் போன்ற பிரச்சினைகளின் விஸ்தரிக்கப்பட்ட ஒரு வடிவமாகவே இன்றைய சூழல்மாசடைதல் தொடர்பான பிரச்சினை அமைவதாகக் குறிப்பிடலாம்.

## 04. ஆய்வின் நோக்கம்

புராதன சமூகத்தில் காணப்பட்ட அசுத்தம், தீட்டு பற்றிய பிரச்சினையின் விஸ்தரிக்கப்பட்ட